## திருப்புதல் தேர்வு - 1

**பாடம் : தமிழ்** **மதிப்பெண்கள்: 25**

**வகுப்பு: 8** **நாள்:11.03.24**

**I. பின்வரும் உரை நடைப் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** **(5x1=5)**

மெழுகுவர்த்தியின் வரலாறு 2000 ஆண்டுகள் பழமையானது. ஆரம்ப காலத்தில் பருத்தி மற்றும் சணல் இழைகளை மிருகக் கொழுப்பில் முக்கி மெழுகுவர்த்தியாகப் பயன்படுத்தினார்கள். இது விலை அதிகமுடையதாக இருந்தது. இப்போதுள்ள வார்ப்பு முறையில் மெழுகு தயாரிக்கும் வழிமுறை 17ஆம் நூற்றாண்டில் அறிமுகமானது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சூயர்லா பிரெஷ் என்பவர் வார்ப்புகளில் விலங்குக் கொழுப்பை ஊற்றி மெழுகுவர்த்தி உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார்.

ஆரம்பத்தில் திரிகளை அடிக்கடி ஒழுங்கு செய்துதான் மெழுகுவர்த்தி எரிக்க வேண்டியிருந்தது.பாரிசைச் சேர்ந்த ஜாக்குலின் காம்பாசொஸ் என்பவர் 1824 பின்னல் போட்ட திரியை உருவாக்கி மெழுகுவர்த்தியில் பயன்படுத்தினார். மிருகங்களின் கொழுப்புக்கு பதில் மெழுகுவர்த்தி பயன்படுத்தும் முறை 19 ஆம் நூற்றாண்டில் தான் அறிமுகமானது. ஸ்காட்லாந்து ஜேம்ஸ் எங் 1850 இல் நிலக்கரியில் இருந்து பார்பின் மெழுகை உருவாக்கிச் சாதனை படைத்தார்.

**வினாக்கள்:**

1. மெழுகுவர்த்தியின் வரலாறு எத்தனை ஆண்டுகள் பழமையானது?
2. ஆரம்ப காலத்தில் மெழுகு எதிலிருந்து பெறப்பட்டது?
3. பின்னல் போட்ட திரி எந்த ஆண்டு உருவாக்கப்பட்டது?
4. விலங்குக் கொழுப்பை வார்ப்புகளில் ஊற்றி மெழுகுவர்த்தி உருவாக்கும் முறையை கண்டுபிடித்தவர் யார்?
5. மிருகங்களின் கொழுப்புக்கு பதில் மெழுகு பயன்படுத்தும் முறை எந்த நூற்றாண்டில் அறிமுகமானது?

**II. பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** **(5x1=5)**

கள்ளக் கருத்துகளைக் கட்டோடு அறுத்தவருக்கு
உள்ளிருக்கும் மெய்ஞ்ஞான ஒளியே பராபரமே!
காசை விரும்பிக் கலங்கிநின்று உன்பாத
ஆசை விரும்பாது அலைந்தேன் பராபரமே!
அறிவை அறிவோருக்கு ஆனந்த வெள்ளமதாய்க்
கரையறவே பொங்கும் கடலே பராபரமே!
அடக்கத் தாம்மாய ஐம்பொறியைக் கட்டிப்
படிக்கப் படிப்பு எனக்குப் பகராய் பராபரமே!

**வினாக்கள்:**

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது?
   அ) குணங்குடியார் பாடற்கோவை ஆ) நந்தீசுவரக் கண்ணி
   இ) மனோன்மணிக் கண்ணி ஈ) எக்காளக் கண்ணி
2. ஆனந்த வெள்ளம் - பிரித்து எழுதுக.
   அ) ஆனந்த + வெள்ளம் ஆ)ஆனந்தம் + வெள்ளம்
   இ) ஆனந்தன் + வெள்ளம் ஈ) ஆனந்தர் + வெள்ளம்
3. மனம் கலங்கி அலைந்ததன் காரணம் யாது?
   அ) அறிவின் மீது ஆசை ஆ) பொருளின் மீது ஆசை
   இ) பழத்தின் மீது ஆசை ஈ) உயிரின் மீது ஆசை
4. பராபரம் என்பதன் பொருள் யாது?
   அ) உயர்ந்த பொருள் ஆ) மேலான ஒன்று
   இ) மேலான பொருள் ஈ) மேலான எண்ணம்
5. இப்பாடலை இயற்றியவர் யார்?
   அ) சுல்தான் அப்துல் காதர் ஆ) திருவள்ளுவர்
   இ) திருமூலர் ஈ)பொய்கையாழ்வார்

**III. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையை எடுத்து எழுதுக.** **(7x1=7)**

1. மரபுக் கவிதைகள் எழுதுவதற்கான இலக்கணம் ____________ இலக்கணம் எனப்படும்.
   அ) யாப்பு ஆ) எதுகை இ) அசை ஈ) தொடை

2. ஓர் அசையோ ஒன்றுக்கு மேற்பட்ட அசைகளோ சேர்ந்து அமைவது ____________ எனப்படும்.

அ) எழுத்து ஆ) சீர் இ) தொடை ஈ) இயைபு

3. யாப்பு இலக்கணத்தின் படி எழுத்துகளை எத்தனை வகையாக பிரிப்பர்?

அ) ஒன்று ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு

4. செப்பல் ஓசை உடைய பாவகையின் பெயர் __________.

அ) கலிப்பா ஆ) வஞ்சிப்பா இ) வெண்பா ஈ) ஆசிரியப்பா

5. இறுதி எழுத்து அல்லது இறுதி ஓசை ஒன்றி வர தொடுப்பது __________.

அ) மோனை ஆ) எதுகை இ) எழுத்து ஈ) இயைபு

6. சீர்கள் ஒன்றோடு ஒன்று பொருந்துவதை __________ என்பர்.

அ) தளை ஆ) அடி இ) பா ஈ) யாப்பு

7. குறில் அல்லது நெடில் எழுத்து தனித்து வந்தாலும் ஒற்றுடன் சேர்ந்து வந்தாலும் __________ அசையாகும்

அ) நேரசை ஆ) நிரையசை

IV. **பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** **(1x3=3)**

**1.**



V. **கடிதம் எழுதுக.** **(1x5=5)**

1. உமது பகுதியில் குடிநீர்த்தொட்டி அமைத்துத் தருமாறு ஊராட்சி மன்றத் தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக,

**(உமது முகவரி: அ. பரத் / அ. பார்வதி, எண் 110, வேலன் தெரு, திருச்சி-10)**